அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624

எண் : 64/2016
தேதி : 07.04.2016

சமத்துவ மக்கள் கட்சி நிறுவனத் தலைவர்
**R.சரத்குமார்** MLAஅவர்களின்
**யுகாதி திருநாள் நல்வாழ்த்துக்கள்**

தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் பேசும் மக்கள், பல லட்சக்கணக்கில் தமிழகமெங்கும் பரவலாக தொழில், வணிகம் மற்றும் பல்வேறு துறைகளில் தங்கள் சொந்த மண்ணில் வசித்துவரும் உணர்வோடு தமிழர்களோடு இரண்டறக்கலந்து வாழ்ந்து வருவது அனைவரும் பெருமைப்பட வேண்டிய விஷயம். பேசும் மொழிகளால் வேறுபட்டிருந்தாலும் தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் மற்றும் கேரள மக்கள் கலாச்சாரத்தாலும், பண்பாட்டாலும் ஒருமித்த உணர்வோடு வாழ்ந்து வருகிறோம்.

'யுகாதி' என்று சொல்லப்படும் தெலுங்கு வருடப்பிறப்பு மற்றும் கன்னட வருடப்பிறப்பு நாளான இன்று, மொழி வேறுபாடுகளைக் கடந்து, சமத்துவம், சகோதரத்துவம் மேலோங்கி வளர்ந்து சமாதானமான, சந்தோஷமான நல்வாழ்வு வாழ நாம் அனைவரும் உறுதி ஏற்க வேண்டும். இந்த உறுதியோடும், உணர்வோடும் செயல்பட்டு, இன்று தொடங்கும் புத்தாண்டில் அனைவரது உள்ளங்களிலும், இல்லங்களிலும் மகிழ்ச்சி பொங்கிட வேண்டும் என்று எனது சக தெலுங்கு மற்றும் கன்னட சகோதர சகோதரிகளுக்கு இனிய 'யுகாதி' நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**R.சரத்குமார்** MLA
தலைவர்